செ.வெ.எண்:.819 நாள்:.24/9/2010.

**தேசிய மாணவர் படை கேடட் திவ்யா சிறந்த ராணுவ அதிகாரி பயிற்சிக்கான விருது பெற்றதற்கான பாராட்டு விழா:**

சென்னை பரங்கிமலையில் உள்ள ராணுவ அதிகாரி பயிற்சி மையம் (ஒ.டி.ஏ) பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான ராணுவ அதிகாரிகள், இங்கு பயிற்சி பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். ராணுவத்துக்குள் நுழைவதற்கு முன்பு பல்வேறு கடினமான பயிற்சிகளை கடந்து செல்ல வேண்டும். ஓடும் குதிரையில் தாவி ஏறுவது, துப்பாக்கியை தூக்கி ஓடியபடி சுடுவது உள்பட பல பயிற்சிகள் ஒ.டி.ஏ.யில் சொல்லித் தரப்படுகின்றன.

இதுவரை பல ஆயிரக்கணக்கில் ஆண், பெண் அதிகாரிகள் பயிற்சி பெற்றிருந்தாலும், ஆண்களே இந்த விருதை தொடர்ந்து பெற்று வந்தனர். இதற்கு இளம் பெண் ஒருவர் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இவர் தேசிய மாணவர் படை முன்னாள் கேடட் A திவ்யா ஆவார்.

2008-ம் ஆண்டு டில்லியில் நடந்த குடியரசு தின அணிவகுப்பில் தமிழகத்தின் சார்பில் திவ்யா பங்கேற்றுள்ளார். **என்.சி.சி** மாணவர் அணியில் சிறப்பாக அணிவகுத்துச் சென்றவர் மற்றும் அகில இந்திய 'பெஸ்ட் கேடட்' ஆகிய இரட்டிப்பு பெருமையையும் ஒருங்கே பெற்றது, அவரது புகழுக்கு மேலும் புகழ் சேர்த்துள்ளது. ஒ.டி.ஏ.யில் கடந்த 11 மாதங்களாக பயிற்சி பெற்று வந்துள்ளார். இந்தப் பயிற்சி முகாமில் பல்வேறு மாநிலத்தில் இருந்து 157 ஆண்களும், 70 பெண்களும் பங்குபெற்றுள்ளனர். ஆண்களுக்கு இணையாக பயிற்சி பெற்றது மட்டுமல்ல, அனைத்து பயிற்சிகளிலும் ஆண்களைவிட சிறப்பாக செயல்பட்டதால் தான் திவ்யாவை, ' பெஸ்ட் கேடட்' என்ற பெருமை தேடி வந்துள்ளது. பயிற்சி நிறைவு விழாவில் ராணுவ தலைமை தளபதி வி.கே.சிங்கிடம் இருந்து 'ஸ்வோர்ட் ஆப் ஹானர்' விருதை திவ்யா பெற்றார்.

மேலும் ஆண்கள் பிரிவை சார்ந்த தேசிய மாணவர் படை கேடட்கள் அரவிந்தன் மற்றும் அரவிந்த் கௌசிக் ஆகிய இருவரும் இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்து ராணுவத்தில் சேர்ந்துவிட்டார்கள். அதற்கான பாராட்டு விழா வரும் **24.09.2010** சுமார் **11** மணியளவில் அன்று தேசிய மாணவர் படை அதிகாரிகளின் உணவு விடுதியில் நடைபெற உள்ளன. இவ்விடுதி புனித ஜார்ஜ் கோட்டை தேவாலயம் அருகில் உள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9